




Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 346

வியாழக்கிழமை
07 நவம்பர் 2024

ஐப்பசி 21
வள்ளுவர் ஆண்டு 2055







பனை அபிவிருத்திச்சபை ஊழியர்கள்

## பதில் தலைவருக்கு எதிராகப் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 7
பனை அபிவிருத்திச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள பதில் தலைவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பனை அபிவிருத்தி சபை ஊழியர்கள் சபை முன்றலில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

15

## தூதரக அதிகாரிகள் பலர் திரும்ப அழைக்கப்பட்டனர்

கொழும்பு, நவ. 7
இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் பலரின் நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

15

## சந்திரிகாவின் பாதுகாப்பு குறைக்கப்படவேயில்லை!

கொழும்பு, நவ. 7
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்குரிய பாதுகாப்புக் குறைக்கப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களுக்காக மட்டும் 120 மில்லியன் ரூபாவரை செலவாகின்றது என்று அமைச்சர்

15

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நிச்சயமாக நீக்கியே தீருவோம்!

அமைச்சரவைப் பேச்சாளர்
விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, நவம்பர் 7
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதே அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடு என்று அமைமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

15

## தேர்தல் விதிமீறலுக்காக வவு.வில் மூவர் கைது!

வவுனியா, நவ. 7
வவுனியாவில் தேர்தல் விதிமுறைகளை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வேட்பாளரின் உருவப்படம் மற்றும் ஸ்டிக்கர் பொறித்த வாகனங்களில் வேட்பாளர்கள் மட்டுமே பயணிக்க முடியும். வேட்பாளரின்றி அவருடைய உருவப்படம்

15

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட மூவர் விடுவிப்பு!

மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

வவுனியா, நவ. 7
தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட மூவர் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.
2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சாளம்பைக்குளம் பகுதியில் வைத்து, கிளைமோர் குண்டுகளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

15

## முறைப்பாடு 1,800

கொழும்பு, நவ. 7
இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை 1,800 க்கும் மேற்பட்ட

15



## நாணய நிதியத்தின் உதவி தாமதமாகும்

முன்னாள் அமைச்சர்
சுசில் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 7
அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்ட அறிக்கை தாமதமானால், நாணய நிதியத்தின் அடுத்தகட்டக் கடன் பெறுகையும் தாமதமாகும் என்று முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

15

சிறுப்பிட்டியில்

## குளவிக்கொட்டுக்கு இலக்கானவர் சாவு

யாழ்ப்பாணம், நவ. 7
யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மேற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு குளவிக் கொட்டுக்கு இலக்கான இளைஞர் உயிரிழந்துள்ளார்.
நவரத்தினம் கேதீஸ்வரன் (வயது-35) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

15



முச்சந்தி முரளி

"அப்ப திரும்ப உலகம் கோமாளிக் கூடாரமா மாறப்போகுது போல"

## வவுனியாவில் சடலம் மீட்பு!

வவுனியா, நவ. 7
வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

15



# டொனால்ட் ட்ரம்ப் அமெ. ஜனாதிபதி

வொஷிங்டன், நவ. 7
அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரும், முன்னாள் அதிபருமான டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற்றுள்ளார்.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மொத்தமுள்ள 538 எலெக்ட்ரோல் வாக்குகளில் வெற்றிக்கு 270 வாக்குகள் தேவைப்பட்டது. இதில் 277:224 என்ற அடிப்படையில் ட்ரம்ப் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.
தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து, எந்தத் தாமதமும் இல்லாமல் வாக்குகள் எண்ணப்பட்டு அறி

15









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் 2024



தமிழர் தாயகத்தின்...
நில வளம் காக்க
கடல் வளம் காக்க
பனை வளம் காக்க

தமிழ் மக்களின்...
வாழ்வுரிமை காக்க
ஆளும் உரிமை மீட்க


ஆதரிப்பீர்!

உங்கள் தோழன்
## சுரேஷ் பிரேமச்சந்திரன்
அவர்களுக்கே உங்கள் வாக்கு

ஐக்கியம் - தேசியம் - ஜனநாயகம்
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி (DTNA)

# பாராளுமன்ற தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

களத்தில் கமல்



**1. தலைமைத்துவம்**
- கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின்
  - தலைவர் - 2014/15
  - உபதலைவர் - 2012/13
- இலங்கை சட்ட மாணவர் சங்கம்
  - உபதலைவர் - 2015/16
- கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் மற்றும் இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட கல்வி தொடர்பான பாசறைகளில் தொடர்ந்து பங்காற்றியமை.
- சர்வதேச நிறுவனத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் பாடசாலைகளின் அபிவிருத்தி செயல்திட்டங்களுக்கு ஆலோசகராக செயற்பட்டமை.
- பல்வேறு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்காக, சர்வதேச நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்பட்ட, 6 மாத கால தலைமைத்துவப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றமை.

**2. முயற்சியாண்மை**
- YAARL FITNESS - 2016 (யாழ் உடற்பயிற்சி நிலையம்)
- YAARL HOSTELS - 2018 (யாழ் சுற்றுலா விடுதி)
- SINGAI RESTAURANT - 2024 (சிங்கை உணவகம்)

**3. கல்வி**
- Attorney - at - law இலங்கைச் சட்டக் கல்லூரி
- LL.B (Hons) - APIIT, கொழும்பு
- B.A (Economics) - கொழும்புப் பல்கலைக்கழகம் (பொருளியல், அரசியல் விஞ்ஞானம், சர்வதேச உறவுகள்)
- க.பொ.த உயர் தரம் - கொழும்பு இந்துக்கல்லூரி (பொருளியல், அரசியல் விஞ்ஞானம், அளவையியலும் விஞ்ஞானமுறையும்)
- க.பொ.த சாதாரண தரம் வரை - யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி

**4. விளையாட்டு**
- உதை பந்தாட்டம்
- கொழும்புப் பல்கலைக்கழக அணியின் உபதலைவர் - 2014/15
- இலங்கைப் பல்கலைக்கழக (SLUSA) Colours விருது - 2012, 2013, 2014
- படகோட்டம் (Rowing)
- கொழும்புப் பல்கலைக்கழக Colours விருது - 2013
- பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் சகலதுறை
- விளையாட்டு வீரராகத் திகழ்ந்தமை.

**5. கலைத்துறை - இயக்குனர்**
- குறும்படம் - " அக (தி) ", " பட்டம் 2 பட்டம் "
- பாடல்கள் - " கனவா நனவா... ", " ஷண்முக நாமமே... ", " மூத்த மொழியின் முதல்வன்... "

மாற்றத்திற்கான நம்பிக்கை...



சுயேச்சைக் குழு - 2
ஊஞ்சல் சின்னம்
4
E.S.P நாகரத்தினம் கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons, BA (Economics) (University of Colombo)

எங்கள் யாழ்
இருப்பியல்
வையத் தலைமை கொள்



# ஆதரவற்றவர்களின் ஆயுதம் நான்

## தபால்பெட்டி
சின்னத்திற்கு வாக்களிப்பீர்

1 2 3 4 5 6 7 8 9

## அங்கஜன்
இராமநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னை பொருளை பெறு நற் புத்திரனை
தன் தமிழுக்காய் ஈந்த தலைவர்
தர்மலிங்கத்தின் புதல்வன்

# சித்தார்த்தன்



* கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் உருவாக்கத்திற்காக தனது குடும்ப சொத்தை (226 பரப்பு) 100 கோடி பெறுமதி கொண்ட நிலத்தை நன்கொடையாக வழங்கியவர்.
* கல்வியே கண்ணெனக் கொண்டு பாடசாலைகள் அற்ற பிரதேசத்தில் அறிவுப் பசியினை போக்க தன் கிராமமான கந்தரோடையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகள் உருவாக்குவதற்கு தமது சொத்தின் பெரும்பகுதியை வழங்கி பல்லாயிரக்கணக் கானோர்களின் அறிவுப் பசியை தீர்த்தவர்கள்.

என்றும் எம் தமிழ் இனத்திற்காய் தன்னை ஈந்த பெருந்தகையை ஆதரிப்போம்

5 X

* தமது சொந்த நிலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரியவர்கள், சிறியவர்கள் இளைப்பாறி மகிழ சுப்பிரமணியம் பூங்காவினை உருவாக்கியவரின் வழித்தோன்றல் சித்தார்த்தனே...




ஒற்றுமைக்காய் ஒன்றிணைந்து...
எம் மக்களுக்காய் சேவை செய்யும்
எம்மவர்களை ஆதரிப்போம்

5 6

## சுயேட்சை குழு 13 X

நீண்ட வரலாற்றுப் பின்னணியை கொண்ட
யாழ் பல்கலையில் இருந்து ஒரு குரல்
தமிழரின் குரலாக ஒலிக்கட்டும்!!




X



1 கி.கிருஷ்ணமீனன்
யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர்

யாழ் பல்கலைக்கழக முன்னாள்
மாணவர் ஒன்றிய தலைவர்
தலைமையிலான கறைபடியாத
கரங்களை கொண்ட மாற்றத்திற்கான
தமிழ் தேசிய இளைஞர் அணி



மசனையா தர்சிகன்
யாழ்.பல்கலைக்கழக மாணவன்,
பௌதிகவியல் ஆசிரியர்
5



9 8 7 6 4 3 2

தமிழ் மக்கள் கூட்டமைப்பு

# மான் இற்கு வாக்களிப்போம்

## பாராளுமன்ற தேர்தல் - 2024



7

முருகானந்தன் யசிந்தன்
- ஆசிரியர் -



8

வரதராஜன் பார்த்திபன்
யாழ்.மாநகர சபை உறுப்பினர்



9

வி.மணிவண்ணன்
முதன்மை வேட்பாளர், முன்னாள் முதல்வர்,

தமிழ் மக்கள் கூட்டணி X


## இன்று சூரன்போர்

யாழ்ப்பாணம், நவ.7 கந்தசஷ்டி உற்சவத்தின் இறுதி நாளான இன்று வியாழக்கிழமை யாழ். குடாநாட்டு முருகன் ஆலயங்களில் சூரன்போர் இடம் பெறவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவம் இடம் பெறும். (ச-17)




## பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



இம்மானுவல் ஆனல்ட்
B.A (Hons) Phil. Spl
MSS Limra International (USA)
AMTC Limra International (USA)

- முன்னாள் முதல்வர், யாழ் மாநகர சபை.
- முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாண சபை.
- மொழிப்பற்றாளன்.

X 2

"தமிழரின் தாகம் தமிழ்த் தேசியம்"
தமிழ் தேசியத்திற்காய் என்றும் தடம்மாறாத பயணம் ....

## பாராளுமன்ற பொதுத் தேர்தல் -2024
(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)

மத்தியில் கூட்டாட்சி. !
மாநிலத்தில் சுயாட்சி.!



1
ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
(ரங்கன்)
(கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர்,
கட்சியின் ஊடகப்பேச்சாளர், பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்)

4
உங்கள் முதன்மைத் தெரிவு
தோழர்
டக்ளஸ் தேவானந்தா
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம்)

X

X 1 2 3 4 5 6 7 8 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டிஜிற்றல் பொருளாதாரம் கலாசாலையில் விழிப்புணர்வு

கொழும்பு, நவ.7
இலங்கையில் தற்போது பேசுபொருளாகியிருக்கும் டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று புதன்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலையின் கணிதநெறி ஆசிரிய மாணவர் செ.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்தியக் கடன் துறை மேலாளர் ம.தயாகரன் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்டு டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பில் சிறப்புரை ஆற்றினார்.
கலாசாலையின் விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவி வீரராகவன் மாயாதேவி 'கல்வித் துறையில் தொழினுட்பப் பயன்பாடுகள்' எனும் தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையை நிகழ்த்தினார். கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார். அதிதிப் பேச்சாளர் ம.தயாகரன் கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். (ச-66)

# இந்தியாவால் இலங்கைக்கு மீன்பிடி உபகரணங்கள்

திருகோணமலை, நவ. 7
இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, திருகோணமலையிலுள்ள 21 மீனவ சங்கங்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிர்காப்பு அங்கிகள், 40 குதிரைவலு இயந்திரங்கள், கூலர் பெட்டிகள் போன்ற மீன்பிடி உபகரணங்களைக் கையளித்துள்ளார்.
கடுமையாக உழைக்கும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதுடன் அவர்களின் தொழில் திறன்களை மேம்படுத்துவதே இந்தியாவின் நோக்கமென இந்தியத் தூதுவர் தெரிவித்தார். (ச-25, 6)

'பசுமையில் மாதகல்'

# மரநடுகை நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.6
இலங்கைமற்றும்பிரான்ஸ் மாதகல் நலன்புரி சங்கங்களின் ஏற்பாட்டில், 'பசுமையில் மாதகல்' எனும் தொனிப்பொருளிலான இலவச மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு, மாதகலில் அமைந்துள்ள இலங்கை மாதகல் நலன்புரி சங்க அலுவலகத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 1மணி வரை நடைபெறவுள்ளது.
குறித்த திட்டத்துக்கான பதிவு செய்யும் செயற்பாடு நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.
எதிர்வரும்18 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் மாலை 3 மணிமுதல்மாலை 5மணி வரையும், சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் மு.ப. 11 மணி வரையும் மாதகலைச் சேர்ந்த மக்கள் பதிவு செய்து இலவச மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-25, 66)



# பொறிமுறையூடாக மின்சாரம் யாழில் ஆலோனைக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.7
அரச காணி உட்பட ஏதேனும் காணிக்குள் குடியிருக்கும் நுகர்வோருக்கு மின்சார சேவையை வழங்கும் பொருட்டு பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான ஆலோசனை கேட்கும் செயலமர்வு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களின் ஆலோசனைகளை கேட்டறியும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு இந்தச் செயலமர்வு நடைபெற்றது.
இதன்போது யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மீள்குடியேற்ற பிரதேசத்தில் காணிகளை அடையாளம் கண்டு மின்சார இணைப்பை வழங்குவதில் சில பிரச்சினைகள் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டினார். (ச-27,66)



நல்லூர்ப் பிரதேச செயலகத்தினரால் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்துக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆயிரம் விதைப்பந்துகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ச-66)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 7
அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
கல்லூரி அதிபர் கு.பாலமுருகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.பா.தனபாலன் கலந்து கொள்ளவுள்ளார். (ரி-555)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படும். பாதிப்பு எதுவும் ஏற்படாது.

**இடபம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டி வரும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணவரவு தாமதமாகும். சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டு. எதிர்பார்த்த காரியம் அலைச்சலையும் செலவுகளையும் ஏற்படுத்தினாலும் முடிந்துவிடும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு நல்லபடி முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். பணியிடத்தில் துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும். சற்றுக் கவனமாக இருக்கவும்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும். பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். கடன்கள் விஷயத்திலும் சற்றுக் கவனம் செலுத்தவும். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். பிரச்சினைகளை சமாளிக்கவேண்டி வரும். காரியங்கள் சாதகமாகமுடியும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டிவரும். மகிழ்ச்சி தரும் நாள். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் 2024

## யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



**2** கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

**5** நடராஜர் காண்டீபன்
சிரேஸ்ட சட்டத்தரணி

**9** செல்வராசா கஜேந்திரன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

**அன்புக்குரிய மக்களே!**
'இரு தேசங்கள் ஒரு நாடு' என்ற இலக்கினையடைய, தமிழ்த் தேசக் கொள்கை வழி நின்று நேர்மையாக செயற்பட்டு வருகின்றோம். இலஞ்சம், ஊழலற்ற - செயல் திறன்வாய்ந்த - சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள இயக்கமாகவே செயற்படுகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சலுகைகளுக்கு விலைபோகாத, நேர்மையான அரசியல் பயணத்தையே முன்னெடுத்துவருகின்றோம்.
எமது அணியின் கொள்கை நிலைப்பாட்டைப் பலப்படுத்த, தமிழ் இனம் தனது வரலாற்றுக் கடமையை ஆற்றும்வகையில், உங்கள் தார்மீக ஆதரவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் '**சைக்கிள்**' சின்னத்துக்கு வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

**தமிழ்த் தேசமாய் பேரெழுச்சி கொள்வோம்!**



**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
தலைவர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்.
**2**

**6**
**மகாதேவன் நடனதேவன்**
முன்னாள் நகரசபை உறுப்பினர்
(சாவகச்சேரி)

**செல்வராசா கஜேந்திரன்**
பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.
**9**

**'இரு தேசங்கள் ஒரு நாடு'**
**இலக்கினை அடைய**
**ஒற்றைத் தலைமையில்**
**ஓரணியாவோம்!**

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

# நாடாளுமன்றத் தேர்தல் -2024



43 வருடங்களாக பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர காலச் சட்டம் ஆகியவற்றின் மூலம் கைதுசெய்யப்பட்ட போராளிகளுக்காக 1000 க்கும் மேற்பட்ட வழக்குகளை சிங்களத்தின் கோட்டைக்குள் நின்று அச்சமின்றி வெற்றிகரமாக எதிர்கொண்டவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா

- கலதாரி குண்டுத் தாக்குதல் மற்றும் காலி கடற்படை முகாம் மீதான தாக்குதல் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களை சட்டரீதியாகப் போராடி விடுவித்தார்.
- புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானுடன் தொடர்புடையவர் எனக் கூறி கைது செய்யப்பட்ட செலான் வங்கி முகாமையாளரை வழக்கு
- புலிகளுடன் தொடர்புடையவர் எனக் கூறி கைதுசெய்யப்பட்ட சாந்ததேவன், மு.கோமகன் வழக்கு
- மொரட்டுவ பல்கலைக்கழக மாணவன் சயந்தன் வழக்கு

**இந்த வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களுக்காக சளைக்காமல் சட்டக் களத்தில் நின்று வாதாடி அவர்களை விடுவித்த தமிழர்களின் நம்பிக்கை கே.வி.தவராசா**






**தமிழர்களின் நீதிக்காக**
**43 வருடங்களாக**
**போராடுபவருக்கே**
**உங்கள் வாக்கு**

# K.V.தவராசா

**சுயேச்சைக்குழு -14**

X 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அமெரிக்கர்கள் சொல்வதென்ன?

அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பெரும் எதிர்பார்ப்புகள் நிறைந்திருந்த இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரும், முன்னாள் அதிபருமான டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதன்படி, அமெரிக்காவின் 47ஆவது அதிபராக அவர் எதிர்வரும் ஜனவரியில் பதவியேற்கவுள்ளார். ட்ரம்பைத் தெரிவுசெய்ததன் மூலம், அமெரிக்கர்கள் பல்வேறுபட்ட ஆரோக்கியமான செய்திகளைச் சொல்லியிருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. 'அமெரிக்கா அமெரிக்கர்களுக்கே' என்ற ட்ரம்பின் சித்தாந்தத்தால் பெருவாரியான அமெரிக்கர்கள் ஈர்க்கப்பட்டுள்ளனர் என்பதும் பட்டவர்த்தனமாகியிருக்கின்றது. ஆனால், எந்தவொரு விடயத்துக்கும் மறுமுகம் ஒன்று இருக்கவே செய்யும். ட்ரம்பின் வெற்றிக்குப் பின்னாலும் 'உலகை நீண்ட ஆபத்துக்குள் தள்ளக்கூடிய' விரும்பத்தகாத விடயங்களும் இருக்கவே செய்கின்றன.

உலகில் இன்று பல்வேறு போர்முனைகள் சூழ்ந்திருந்தாலும், உக்ரைன் - ரஷ்ய மோதலே மூன்றாம் உலகப்போரின் ஆரம்பப் புள்ளியாக மாறுவதற்கு அதிக சாத்தியங்கள் உள்ளன. ஆதலால், இந்தப் போர் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்ற பரப்புரையை ட்ரம்ப் மீண்டும் மீண்டும் முன்வைத்தார். மூன்றாம் உலகப்போர் எமக்கு வேண்டாம். வளமான பொருளாதாரமும், திடமான எதிர்காலமும்தான் இன்றைய உலகுக்குத் தேவை. எதற்காக அமெரிக்கப் படைகள் இன்னொரு நாட்டுக்காகப் போரிட வேண்டும்? இவ்வாறான கருத்துகளால் அவர் அமெரிக்கர்களைக் கட்டிப்போட்டார். ஆதலால், 'இன்னொரு உலகப்போர் வேண்டாம்' என்ற செய்தியை ட்ரம்பை அரியணையில் ஏற்றியதன் மூலம் அமெரிக்கர்கள் உரக்க ஒலித்திருக்கின்றனர்.

ஆனால், ஏற்கனவே குறிப்பிட்டதைப்போன்று இந்தத் தேர்தல் வெற்றியின் மறுமுகம் ஆபத்தானது. 'ஆபிரிக்கக் குடியேறிகளை அருவருக்கத்தக்க எலிகள்' என்று விமர்சித்தவர் ட்ரம்ப். புவி வெப்பமாதலைத் தடுக்கவேண்டுமாயின், அதற்குப் பொதுவான அளவீடுகள் தேவை. அமெரிக்க டொலரை அள்ளியிறைக்க முடியாது என்பதும் அவர் அறிவிப்பு. ஆதலால், குடியேறிகளுக்கும், பூகோள வெப்பமாதலுக்கு எதிரான செயற்றிட்டங்களுக்கும் ட்ரம்ப் ஓர் சிம்மசொப்பனம். அத்துடன், 'அமெரிக்கப் பணம்' என்ற நிலைப்பாட்டில் நின்று ஐக்கிய நாடுகள் சபைக்கான ஒதுக்கீடுகளையும் ட்ரம்ப் குறைப்பார்.. அவ்வாறு அவர் செயற்பட்டால் போர் தின்ற பூமிகளில் மேற்கொள்ளப்படும் பலநூறு செயற்றிட்டங்கள் ஆட்டம் காணும். இப்படியான பொதுவான உலக நெருக்கடிகள் ட்ரம்பின் வெற்றியைத் தொடர்ந்து ஏற்படுவதற்குச் சாத்தியங்கள் அதிகம்.

இதே கொள்கைகளை இதற்கு முன்னர் பிரதியெடுத்ததால்தான் மக்கள் ட்ரம்பைத் தோற்கடித்து பைடனை அரியணையில் ஏற்றினார்கள். எனவே, மீண்டும் அவ்வாறான தவறை அவர் செய்வதற்கு வாய்ப்பில்லை என்று எண்ணிக்கொண்டாலும், 'பொற்காலம் பிறந்துள்ளது: என் முன்னைய ஆட்சி அப்படியே திரும்புகின்றது' என்று புளோரிடாவில் அவர் ஆற்றியுள்ள வெற்றியுரை பல ஐயப்பாடுகளை ஏற்படுத்தவே செய்கின்றது. இப்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் மீதும், ஐக்கிய நாடுகள் சபை மீதும் கூடுதல் பொறுப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. உலகின் சமநிலையைத் தீர்மானிக்கவேண்டிய பெருங் கடமை அந்தத் தரப்புகள் மீது இருக்கவே செய்கின்றது.




# பொதுத்தேர்தலையொட்டி நாட்டில் விசேட பாதுகாப்பு

கொழும்பு, நவ.7

**இலங்கையின் பொதுத்தேர்தலை முன்னிட்டு விசேட பாதுகாப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இலங்கை சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சுமார் 10,500 பேர் முப்படையைச் சேர்ந்த கூடுதல் அதிகாரிகளின் ஆதரவுடன் பொலிஸார் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 52 வாக்கு எண்ணும் மையங்களில் தற்காலிக சோதனைச் சாவடிகள் உட்பட நாடு முழுவதும் 131 வீதித் தடுப்புகளை இதுவரை பாதுகாப்பு அதிகாரிகள் அமைத்துள்ளனர். அதேவேளை எதிர்வரும் 15ஆம் திகதியன்று இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெரிவு வெளியாகும் நிலையில் அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பன்றிக் காய்ச்சல் கட்டுப்பாடு தளர்வு

கொழும்பு, நவ.7

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் நிலைமை காரணமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் விதிக்கப்பட்டிருந்த விதிகளை தளர்த்தி புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஆரோக்கியமான விலங்குகளை கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார். (ச)

## மின்சாரசபை மறுசீரமைப்பு

கொழும்பு, நவ.7

மின்சாரசபையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் மின்சாரசபை தனியார் மயமாக்கப்படமாட்டாது என மின்சார சபை தெரிவித்துள்ளது.

மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இணையத்தினூடாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டு வருகின்றன. மக்கள் வழங்கிய ஆணையின் நிமித்தம் தரமான.மக்கள் நேய, வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் வகையிலான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஐந்து வருடங்களில் மக்களுக்கு குறைந்த செலவில் தரமான சேவை வழங்கப்படும் என்று மின்சார சபை இயக்குநர் சபை தெரிவித்துள்ளது. (ச-6)

## 2030ஆம்ஆண்டில் இராணுவம் குறைப்பு

கொழும்பு, நவ.7

தற்போது இருக்கும் இராணுவத்தினரின் ஆட்பலத்தை 2030 ஆம் ஆண்டளவில் 130,000 ஆககுறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் கே.ஏ.என். சிசிர குமார தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இராணுவத்தின் எண்ணிக்கை தேவையான அளவில் குறைக்கும் நடைமுறை நடைபெற்று வருகின்றது. ஒரு லட்சத்து 43 ஆயிரம் இராணுவத்தினரில் எவரும் பணியிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் எனத் தெரிவித்த இராணுவ ஊடகப் பேச்சாளர், இந்தக் கட்டுப்பாடு இயற்கையாகவே மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## அரிசி விலை அதிகரிக்காது

2024 ஆம் ஆண்டு யால மற்றும் மஹா பருவத்தில் அரிசி உபரியாக காணப்படும் பின்னணியில் அரிசி தட்டுப்பாடு மற்றும் அரிசியின் விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லை என விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. அரிசியின் விலையைக் கணக்கிடும் போது அரிசி உற்பத்தியின் உபதயாரிப்புகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## நாளை

08.11.2024

வெள்ளிக்கிழமை - ஐப்பசி - 22

சுபநேரம் : 06.05 - 07.35

ராகுகாலம் : 10.35 -12.05

## நாளொரு நல்வார்த்தை

**ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நடுங்கள்**

- கரோலஸ் இலினேயஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சசிகலாவின் கார்மீது கல்வீச்சு

கொழும்பு, நவ.7
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் பயணித்த கார் மீது இனம்தெரியாத நபர்களால் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தனது வீட்டில் இருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பிரசாரப் பணிகளுக்காக காரில் பயணித்த போது கார் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-20)

தமிழ் மக்கள் கூட்டணியினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி தேர்தல் தொகுதியில் தமது பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். யாழ். தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையில் சக வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச-20)



# ஊடக அடக்குமுறை போலிப் பிரசாரமே!

## விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, நவ.7
ஊடகங்களை ஒடுக்கி, தணிக்கைக்கு உட்படுத்துவதற்குரிய எந்தவொரு தேவைப்பாடும் அரசாங்கத்துக்குக் கிடையாது. இவ்வாறான போலிப் பிரசாரங்களை முன்னெடுப்பது தவறு. -இவ்வாறு அமைச்சரவைப்பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஊடக அடக்குமுறையை கையாளவேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் அரசாங்கத்துக்குக் கிடையாது. இணைய ஊடகங்களையும் நாம் கட்டுப்படுத்தவில்லை. ஊடக ஒழுக்கவிழுமியங்களைக் கடைப்பிடித்து செயற்படவேண்டிய பொறுப்பு ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு உள்ளது.

போலிப் பிரசாரங்களை முன்னெடுப்பது தவறு. அந்தவகையிலேயே ஜனாதிபதியின் படத்தைப் பயன்படுத்தி போலி நாணயத்தாளை வெளியிட்ட நபர் கைது செய்யப்பட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# ஷாந்தவுக்கு சிறை உறுதி

கொழும்பு, நவ,7
முன்னாள் பிரதியமைச்சர் ஷாந்த பிரேமரத்னவுக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

பெண் ஒருவருக்கு மின்சாரசபையில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஐம்பதாயிரம் ரூபா இலஞ்சம் பெற்றதாக முன்னாள் பிரதியமைச்சர் ஷாந்த பிரேமரத்னவுக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்ட வழக்கில் கொழும்பு மேல்நீதிமன்றம் 2017 ஆம் ஆண்டு முன்னாள் பிரதியமைச்சர் ஷாந்த பிரேமரத்னவுக்கு நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்திருந்தது.

ஷாந்த பிரேமரத்ன இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் கொழும்பு மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்துள்ளது. (ச-25, 6)

# பிரதமர் மருத்துவசேவை பொதுச்சேவைக்கு கையளிப்பு



கொழும்பு, நவ.7
பிரதமர் அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த மருத்துவப் பிரிவை கலைத்து அதில் சேவை செய்த மருத்துவ அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் உட்பட அங்கிருந்த சுகாதார உபகரணங்கள், ஔடதங்கள், இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் என்பவற்றை மீண்டும் சுகாதார அமைச்சுக்குப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்த்ரி தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

அத்தியாவசியமற்ற செலவுகளைக் குறைக்க அரசு எடுத்துள்ள கொள்கை ரீதியான தீர்மானத்துக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்துக்கு மாம்பழம்

- ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் பிரேமதாஸவும் டி.பி.விஜயதுங்கவும் விமானங்களால் குண்டுகளை வீசிச் சிதைத்தபோதும்
- சந்திரிகா யாழ் . மண்ணை விட்டு இடம்பெயரவைத்தபோதும் தணிக்கையின் பெயரால் தடை செய்தபோதும்
- மஹிந்த தன் கூலிப்படையை ஏவி குண்டெறிந்தபோதும்
- உதயனுக்குள் புகுந்து பணியாளரை பலியெடுத்தபோதும்
- அச்சியந்திரங்கள் மிச்சமின்றி எரித்தபோதும்
- ஊடகவியலாளர்களை தேடித்தேடி வேட்டையாடியபோதும்
- கைதுகள், மிரட்டல்கள், நெருக்கடிகள் எனத் தந்தபோதும்

அத்தனையையும் கண்டு ஓடிடாமல் மண்ணில் நிலைத்து நின்று தன்னந்தனியே நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு 40 வருடங்களாக தமிழ்த் தேசியத்துக்காக

உதயன் சுடர் ஒளி ஊடகங்கள் மூலம்

இலங்கையின் எட்டுத்திக்கிலும் தமிழர்களுக்கு நேர்ந்த அக்கிரமங்களை வெளிப்படுத்தி களமாடிய நாயகருக்கே

**உங்கள் வாக்கு!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் மாபெரும் நிதி நிறுவனத்திடமிருந்து உங்கள் நிலையான வைப்புக்களுக்கு மிக அதிகமான அனுகூலங்கள்

LOLC ஃபினான்ஸ் பிஎல்சி உங்களின் நிலையான வைப்புக்கு உயர் பிரதிபலன்களுடன், உச்ச பாதுகாப்பையும் வழங்குகிறது. LOLC ஃபினான்ஸ் பிஎல்சியுடன் நீங்களும் இன்றே முதலீடு செய்து பெருமளவு பலன்களை அனுபவியுங்கள்.

| காலம் | மாதாந்த | | வருடாந்தம் | | முதிர்வு | |
|---|---|---|---|---|---|---|
| மாதங்கள் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் | சாதாரணம் | வருடாந்த சதவீதம் |
| 1 | 9.00% | 9.38% | | | 9.00% | 9.38% |
| 3 | 8.75% | 9.11% | | | 9.25% | 9.58% |
| 6 | 8.75% | 9.11% | | | 9.25% | 9.46% |
| 12 | 9.25% | 9.65% | 9.75% | 9.75% | 9.75% | 9.75% |
| 13 | 9.25% | 9.65% | | | 9.75% | 9.71% |
| 18 | 9.25% | 9.65% | | | 9.75% | 9.53% |
| 24 | 9.25% | 9.65% | 10.00% | 10.00% | 10.00% | 9.54% |
| 36 | 9.25% | 9.65% | 10.50% | 10.50% | 10.50% | 9.56% |
| 48 | 9.25% | 9.65% | 11.00% | 11.00% | 11.00% | 9.54% |
| 60 | 9.25% | 9.65% | 11.50% | 11.50% | 11.50% | 9.51% |

இந்த வட்டி வீதம் 2024/11/07 திகதிக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
*நிபந்தனை பொருந்தும்

QR குறியீட்டை Scan செய்யவும்.

0117 574 810
தொடர்புகளுக்கு: 0115 715 555 www.lolcfinance.com
LOLC ஃபினான்ஸ்

# நிரந்தர அரசியல் தீர்வுக்காக இளைஞரணி எழுச்சியுறும்!

## தமிழ் மக்கள் கூட்டமைப்பின் வேட்பாளர் கிருஷ்ணமீனன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ.7**

**புதிய தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தில் தமிழ்த் தேசியத்தின்பால் பற்றுறுதி கொண்டு பயணிக்கும் இளைஞர்களாகிய நாம் தமிழ் மக்களின் தலைவிதியை தமிழ் மக்களே தீர்மானிக்கும் வண்ணம் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பை நோக்கிய ஜனநாயக வழிமுறையைப் பின்பற்றி நிரந்தர அரசியல் தீர்வை பெற நிலத்திலும் புலத்திலும் உள்ள அனைத்து தமிழர் தரப்பையும் ஒருங்கிணைத்து செயலாற்றுவோம் என உறுதி பூண்டுள்ளோம்.**

-இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டமைப்பின் சுயேச்சைக்குழு - 13 கரும்பலகைச் சின்னத்தில் போட்டியிடும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் ஒன்றியத் தலைவர் கி.கிருஷ்ண மீனன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈழத்தமிழ் மக்களாகிய நாம் பேரினவாத சிங்கள அரசியல் தலைவர்களாலும் இனவாதச் செயற்பாட்டாளர்களாலும் அன்று முதல் இன்று வரை அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றோம். இவற்றுக்கு எதிராக சட்டங்களை முறையாக கையாள்தலும் முறையான வெளியுறவுக் கொள்கைகள் மூலம் இனவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் ஏற்படுத்தலும் தீர்வு காணலும் வேண்டும்.

சர்வதேசரீதியில் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பொறிமுறைகளின் ஊடாக முறையான வெளியுறவு கொள்கைகளைப் பாவித்து குற்றம் நிகழ்த்திய அவர்களுக்கு தண்டனைகளைப் பெறுவதுடன் மீள இவ்வாறான இன அழிப்பு மற்றும் ஒடுக்குமுறைகள் நிகழாமையை உறுதி செய்தல் வேண்டும்.

ஜனநாயக ரீதியிலே சிறந்த அபிவிருத்தியுடன் கூடிய நிறைவான நிலையான வாழ்க்கைமுறையை எமது ஈழத்தமிழ் மக்களுக்கு உருவாக்குவதுடன் பூகோள அரசியல் நகர்வுகளையும் பூகோள நலன்களையும் கருத்தில் கொண்டு புதிய நலத் திட்டங்களையும் உருவாக்கி சிறப்புற தமிழ் மக்கள் கூட்டமைப்பானது முற்றுமுழுதாக ஓர் மக்கள் நலன் சார்ந்த அமைப்பாக இயங்கும்.

இதற்காக தமிழ் மக்களின் விடுதலைக்காக குரல் கொடுக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் விலை போகாத சோரம் போகாத அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து சமஷ்டி அடிப்படையிலான நிரந்தர அரசியல் தீர்வின் மூலம் இழந்த இறையாண்மையை மீளப்பெறத் தேவையான நகர்வுகளை முன்னெடுப்போம் - என்றார். (ச)

# தேர்தல் விதிமீறல் பார்த்தீபனுக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், நவ. 7

தேர்தல் நடத்தை விதிமீறல் குற்றச்சாட்டு தொடர்பில், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் வேட்பாளராகப் போட்டியிடும் வ.பார்த்தீபனுக்கு அழைப்பாணை பிறப்பித்து பருத்தித்துறை நீதிவான் கட்டளை பிறப்பித்துள்ளார்.

வடமராட்சி பருத்தித்துறை நகர்ப் பகுதியில் கடந்த ஒக்ரோபர் 24 ஆம் திகதி தேர்தல் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்ட போது விதி மீறலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வ.பார்த்தீபன் பருத்தித்துறை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்டதன் பின்னர் பொலிஸ் பிணையில் அன்றைய தினம் இரவே விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், குறித்த தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் வழக்குப் பதிவு செய்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குப் பத்திரம் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜுலை 30 ஆம் திகதி வ.பார்த்தீபன் மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுத்து கட்டளை பிறப்பித்தார். (ச-100)



ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் தேர்தல் பிரசார அலுவலகம் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. வேட்பாளர் சுரேன் குருசாமி குறித்த கட்சி அலுவலகத்தைத் திறந்து வைத்தார். (ச-113)



எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ். தேர்தல் தொகுதியில் ஊஞ்சல் சின்னத்தில் சுயேச்சைக்குழு - 2 இல் போட்டியிடுகின்ற சட்டத்தரணி ஈ.ஸ்.பி. நாகரத்தினம் கமலரூபன் பொன்னாலை பகுதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், இடர்பாடுகளைக் கேட்டறிந்து கொண்டதுடன் அவற்றுக்கான தீர்வுகளை எட்டுவதற்கான வழிவகைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுடன் இணக்கம்; எந்தத் திட்டமும் இல்லை

## விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

**நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கூறுவதுபோல தமிழரசுக் கட்சியுடன் எந்தவொரு இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது 'தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக சுமந்திரன் நியமிக்கப்படவுள்ளார் எனவும், அரசுடன் இணைவதற்கு பெடரல் அரசமைப்பு மற்றும் ஜெனிவாவில் 30/1 தீர்மானத்தை அமுலாக்கல் ஆகிய இரண்டு நிபந்தனைகளை அவர்கள் (தமிழரசுக் கட்சி) முன்வைத்துள்ளனர் எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். இது உண்மையா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

வேலையில்லாததால் அவர் (கம்மன்பில) எதை எதையோ உளறி வருகின்றார். அவர் எமது கட்சியில் எவ்வித பதவியையும் வகிக்கவில்லை. அமைச்சர் யார் என்பதை தீர்மானிக்கும் அதிகாரமும் அவருக்கு வழங்கப்படவில்லை. அவர் அப்பட்டமான பொய்யைக் கூறுகின்றார். அப்படி எந்த திட்டமும் இல்லை" - என்றார். (ச-44)

## போதை மாபியாவின் சொத்துகள் முடக்கம்

கொழும்பு, நவ.7

பிரபல போதைவஸ்துக் கடத்தல்காரனான பழனி ஷிரான் குளோரியனின் 80 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

வத்தளையைச் சேர்ந்த குறித்த நபர் தற்போது இந்தியாவில் சிறைவாசம் அனுபவித்து வருகிறார். இவரது இரண்டு மாடி வீடு, ஆடம்பரக் கார், விசைப்படகு என்பனவே முடக்கப்பட்டுள்ளன. இவரது வீட்டின் பின்புறத்திலுள்ள விசைப்படகு சந்தேகநபர் இந்தியாவுக்கு தப்பிச்செல்ல பயன்படுத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

அதேவேளை கிளப் வசந்தவின் கொலையுடன் இவருக்குத் தொடர்பு இருப்பதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. (ச-6)

## 3 மாவட்டங்களுக்கு சிறிய வாக்குச்சீட்டு

கொழும்பு, நவ.7

பொலநறுவை,மொனராகலை,கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டு ஏனைய மாவட்டங்களின் வாக்குச்சீட்டுகளை விட சிறிதாக அச்சிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் இந்த மூன்று மாவட்டங்களிலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதே இதற்குக்காரணம்.

ஏனைய மாவட்டங்களின் வாக்குச்சீட்டுகள் இரண்டு நிரல்களாக பிரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த மூன்று மாவட்டங்களினதும் வாக்குச்சீட்டுகள் ஒரு நிரலாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்றும் தேர்தல்கள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-6)



## சம்பந்தனின் அரச இல்லம் கையளிக்கப்படவில்லை

கொழும்பு, நவ.7

மூன்று முன்னாள் அமைச்சர்கள் தமது உத்தியோகபூர்வ இல்லங்களை இதுவரை திருப்பி ஒப்படைக்கவில்லை என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

நிஷாந்த பண்டார, மொஹான் டீ சில்வா, அஜித் ராஜபக்ச ஆகியோரே உத்தியோகபூர்வ இல்லங்களை இதுவரை திருப்பி ஒப்படைக்கவில்லை.

அதேவேளை மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான ஆர். சம்பந்தனின் இல்லமும் இதுவரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை எனவும் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-25, 6)

## நிகழ்நிலை காப்புச் சட்டம் புதிய நாடாளுமன்றில் முடிவு

கொழும்பு, நவ.7

நிகழ்நிலை காப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பது பற்றி புதிய நாடாளுமனத்தில் தீர்மானிக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கமையவே நிகழ்நிலை காப்பு சட்டம் நடைமுறைப்படுமெனவும் போலி தகவல்களை தடுப்பதே நிகழ்நிலை காப்பு சட்டத்தின் நோக்கமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## சமூக நடவடிக்கைக்கு காலிமுகத்திடல்

கொழும்பு, நவ.7

காலிமுகத்திடல் மைதானத்தை பல்வேறு சமூக நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதன்படி விழாக்கள், இசைக் கச்சேரிகள் மற்றும் மக்கள் சுதந்திரமாக பங்கேற்க அனுமதிக்கும் பிற கொண்டாட்டங்களுக்கு பொருத்தமான அளவுகோல்களுக்கு உட்பட்டு காலிமுகத்திடல் மைதானத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஒ)

செய்திகள்




சும்மா கிடந்த இரும்பை வளைச்சு சூலமாக்கினால், பிறகு அது ஆட்டைக் கொண்டா, மாட்டை கொண்டா எண்டு கேட்டிச்சாம். அந்தக் கதைமாதிரி ஆகிட்டுது வில்லு டாக்குத்தரின்ர கதை. சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு போன வருத்தக்காரரை எல்லாம் உடனேயே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி, அவையைப் போட்டு உலைச்ச அழலில சனங்கள் இருந்தது. அந்தநேரம் பார்த்து, வில்லு டாக்குத்தரும் போர்க்கொடி தூக்க "இவன் டாக்குத்தரா இருந்தாலும் எங்களுக்காக குரல் குடுக்கிறானே" எண்டதால சனமும் றோட்டுக்கெல்லாம் இறங்கி சப்போர்ட் பண்ணினவை. ஆனால் அதை பிறகு வந்த பேஸ்புக் நேரலையளிலையும், இப்ப எலக்சன் கேட்டும் நாறடிச்சுப் போட்டு நிக்கிறார் டாக்குத்தர் வில்லு. இப்பிடி சும்மா கிடந்த, ஒரு பேஸ்புக் பைத்தியத்தை பெரியாளாக்கினதுக்கு அடிப்படைக் காரணம், சாவக்சேரி ஆஸ்பத்திரியில வருத்தக்காரரை ஒழுங்காக் கவனிக்காமல் விட்டதும், அங்க இருந்த வசதிக்குறைபாடுகளும் தான்.

அந்த ஆஸ்பத்திரிக்கு போனவைக்கு நல்ல மருத்துவம் கிடைச்சிருந்தா இப்பிடி ஒரு பேஸ்புக் பைத்தியம் இருக்கெண்டதே சனத்துக்கு தெரியாமல் போயிருக்கும். இனிமேலும் இப்பிடியான கேஸ்"கள் உருவாகக் கூடாதெண்டால் முதல்ல இஞ்சையுள்ள ஆஸ்பத்திரியளில சனத்துக்கு நல்ல மருத்துவம் கிடைக்கிற வழியளைப் பாக்கவேணும். ஆனால் இதுக்குப் பிறகும் எங்கட சுகாதாரத் திணைக்களம் திருந்தினமாதிரித் தெரியேலை. ஒழுங்கா இயங்கிக் கொண்டிருக்கிற ஆஸ்பத்திரியளைக் கூட நாசமாக்கிற வேலையளைத்தான் அவையள் பார்த்துக்கொண்டிருக்கினம். அதுக்கு நல்ல உதாரணம் அச்சுவேலி ஆஸ்பத்திரியில இருந்த 'எம்.எல்.ரி'யை( வருத்தக்காரரின்ர ரத்தம், மல சலம் இதுகளைச் சோதிக்கிற ஆள்) தடாலடியா வேற ஆஸ்பத்திரிக்கு மாத்திப்போட்டினமாம். இதால அங்கத்தைச் சனங்கள் தங்கட ரத்தப் பரிசோதனை, சலப்பரிசோதனை ரிப்போர்ட்டுகளை உடன எடுக்கேலாத நிலைமை. இப்ப அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு ஒராள் போய் தன்ர ரத்தத்தைச் சோதிக்கக் குடுத்தால், அதை அவை வேற ஏதும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி , சோதிச்சு , ரிப்போர்ட்டைக் குடுக்க மூண்டு நாளாவது பிடிக்குதாம். அதுமட்டும் என்ன கடும் வருத்தமெண்டாலும் சனங்கள் ஆவெண்டு பாத்துக்கொண்டு இருக்கவேணும்.

ஒரு இடத்தில இருக்கிற உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யிறதெண்டால், அதுக்குப் பதிலா இன்னொருத்தரைப் போட்டிட்டுத்தானே இடமாத்தவேணும். ஆனால் இஞ்ச இருந்த 'எம்.எல்.ரி' யை இடமாத்தினவைக்கு அதுக்குப் பதிலா இன்னொரு ஆளைப் போடவேணும் எண்டது மறந்துபோட்டுது போல. இல்லாட்டி அச்சுவேலிச் சனங்கள் கொஞ்சம் அலைஞ்சு திரியட்டும் எண்டு நினைச்சினமோ தெரியா. இப்பிடி வருத்தக்காரர் தங்கட ரெஸ்ட்டிங் ரிப்போர்ட்டுக்காக நாள்கணக்கில காத்திருக்கிறதால அவைக்கு ஏதும் ஏடாகூடம் நடக்கவும் வாய்ப்பிருக்கு. மருத்துவத்தில ஒவ்வொரு செக்கனுக்கும் பெறுமதி இருக்கு. எவ்வளவு வேளைக்கு வருத்தத்தைக் கண்டுபிடிச்சு மருத்துவம் செய்யிறமோ அவ்வளவு வேளைக்கு அந்த வருத்தம் மாறிடும். லேட்டாக லேட்டாக சிக்கல் தான். இதெல்லாம் எங்களை விட சுகாதாரத் திணைக் களக்காரருக்கு நல்லாவே தெரியும். அப்பிடித் தெரிஞ் சும், சனங்கள் அங்க ஆர்ப்பாட்டம் செய்தும் கூட அவை யள் பிடிச்சு வைச்ச பிள்ளையார் மாதிரி இந்த விசயத்தில அசையாம இருக்கிறது ஞாயமோ?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரசங்ஹாரம்

யாழ்ப்பாணம், நவ.7

சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி ஆலயக் கந்தஷஷ்டித் திருவிழாவின் சூரசம்ஹாரம் இன்று வியாழக்கிழமை மாலை இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 3.30 மணியளவில் அபிஷேகம், பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சூரசம்ஹாரம் இடம்பெறும்.

(ச-66)

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 08 . 1936


மறைவு 07 . 11 . 2005

**அமரர் பிலேந்திரன் ஜேம்ஸ்**

கல்வியிலும் கலையிலும் பெயர் சொல்ல
வைத்த எங்கள் அப்பாவின் நினைவுநாள்
உங்கள் ஆன்மா ஆண்டவரில்
களிப்படைய வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 5ம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



தோற்றம் 04.10.1939

மறைவு 03.11.2019

**அமரர் மார்க்கண்டு திலகநாதன்**

எம் இதயங்களில் என்றும்
குடியிருக்கும் அன்புத் தந்தையே
உமது நினைவுகள்
செல்வத்திலும் மேலானவை
உமது பாசமழையில்
இன்றும் நனைகின்றோம்
என்றும் எம் எண்ணங்களில்
எரியும் தீபமாகவே இருக்கின்றீர்

என்றும் உம் நினைவில் வாழ்ந்துகொண்டிருக்கும்

புலம் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.

**குடும்பத்தினர்**

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**சிற்றுண்டிச்சாலைகள், வாகனப்பாதுகாப்பு நிலையங்கள், ஆரிய குளம் பொழுதுபோக்கு மையம், பண்ணை கடற்கரைப் பூங்கா, நடமாடும் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025**

## (01.01.2025 – 31.12.2025)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,180.00 (வற் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 07.11.2024 – 21.11.2024 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 22.11.2024 மு.ப 10.00 மணிவரை

கேள்வி திறத்தல் - 22.11.2024 மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 22.11.2024 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
5. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
6. குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகள் நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிபந்தனையின்பிரதி தேவைப்படின் அலுவலகநேரத்தல் மாநகர சபை வளாகத்தில் உள்ள நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.

| இல | சிற்றுண்டிச்சாலைகள், வாகனப்பாதுகாப்பு நிலையங்கள், ஆரிய குளம் பொழுதுபோக்கு மையம், நடமாடும் கடைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 10,000.00 | 1,000,000.00 |
| 2 | யாழ் பொதுநூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 360,000.00 |
| 3 | துரையப்பா விளையாட்டு அரங்கு சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 94,500.00 |
| 4 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாக உள்ள வாகனத்தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | 4,000.00 | 385,000.00 |
| 5 | நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 4,500.00 | 414,000.00 |
| 6 | ஆரியகுளம் பொழுதுபோக்கு மையம் | 10,000.00 | 171,600.00 |
| 7 | நடமாடும் கடை - முத்திரைச்சந்தை இல 01 | 20,000.00 | 181,100.00 |
| 8 | நடமாடும் கடை - முத்திரைச்சந்தை இல 02 | 20,000.00 | 183,100.00 |
| 9 | நடமாடும் கடை – பண்ணை மீன் சந்தை இல 01 | 20,000.00 | 211,000.00 |
| 10 | நடமாடும் கடை – பண்ணை மீன் சந்தை இல 02 | 20,000.00 | 211,000.00 |
| 11 | நடமாடும் கடை – நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 01 | 20,000.00 | 211.100.00 |
| 12 | நடமாடும் கடை – நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 02 | 20,000.00 | 190,000.00 |
| 13 | பண்ணை கடற்கரைப்பூங்கா | 20,000.00 | 1,420,000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(cr.43617) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 07 . 1945

மறைவு 30 . 10 . 2024

## சங்கரப்பிள்ளை பாஸ்கரன்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பாஸ்கரன் கடந்த (30.10.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், சரஸ்வதியின் (நெதர்லாந்து) அன்புக் கணவரும், ஜெயரட்ணம் (லண்டன்), பத்மசேனன் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரனும், ஜெயந்தி (லண்டன்) உதயகுமார் (சுவிர்சர்லாந்து), கிஷோக்குமார் (நெதர்லாந்து), கோமதி (இலங்கை), சுமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன், சறோஜினி, புஸ்பலோஜினி, கோபாலகிருஷ்ணன், ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரி, மேசிகிறிஸ்ரீனா, போல்ராஜ், பரேக்கா, ஒலிவியா, தமிழினி, நர்த்தகி, சரண்ஜா, அனோஜா, தனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க நிகழ்வுகள் நாளை மறுதினம் (09.11.2024) சனிக்கிழமை நெதர்லாந்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபையினர் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
**குடும்பத்தினர்**
077 749 5205
+ 316 848 70695

நாவலர் றோட்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(cs.29230) N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



## முத்துதம்பி செல்வஸ்தான்
## SLPS 1, BED,HNDA

**சேவை விபரம்**

| | |
|---|---|
| ஆசிரியர், யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை | 27.03.1990 – 31.12.1995 |
| அதிபர், யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை. | 01.01.1996 – 20.03.2007 |
| அதிபர், யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை. | 21.03.2007 – 09.09.2012 |
| அதிபர், இணுவில் இந்துக் கல்லூரி. | 10.09.2012 – 01.07.2015 |
| அதிபர் , யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி. | 02.07.2015 – 06.1.2024 |



சுன்னாகம் கதிரமலை ஆலய சூழலில் கல்விச் சமூக வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்த பேரன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அதிபர் திரு. செல்வஸ்தான் அவர்கள் அவரது இளமைக்காலம் முதலே நற்பண்பும் இறைபக்தியும் நிறைந்தவர். அவர் கல்வி கற்கும் காலத்திலேயே சிறந்த மாணவராக திகழ்ந்ததுடன் தமது உறவினர்கள், அயலவரது பிள்ளைகளையும் ஊக்குவித்து கல்வி கற்பித்தவர். சுன்னா கத்திலுள்ள பல நிறுவனங்க ளில் பங்காற்றி சமூக சேவையிலும் ஈடுபட்டு வந்தவர். ஆசிரியராகிப் படிப்படியாக அதிபராகி ஒவ்வொரு பாடசாலைகளிலும் தனது நிர்வாகத்திறனும் ஊக்கத்திறனும் கடமை உணர்வுடனும் செயற்பட்டவர் சக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோரின் பாராட்டைப் பெற்றவர். இவரது காலத்தில் கல்வி நிலையும் வளர்ச்சி பெற்று தேசிய பாடசாலைஎன அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இவரது சேவைகள் எப்போதும் யாராலும் மறக்க முடியாது. அவர் ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் சேவையைத் தொடர ஸ்ரீ கதிரமலை சிவனின் பாதம் பணிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சிவஸ்ரீ.நா.சர்வேஸ்வரக் குருக்கள்**
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.

புகழ்பூத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெறும் திரு.மு.செல்வஸ்தான் அவர்களை வாழ்த்தி ஆசீர்வதிப்பதில் ஆனந்தமடைகிறேன். இக்கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் பல பாடசாலைகளில் அதிபராக விளங்கி அரிய சேவையாற்றி ஓய்வு பெறுகிறார். ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வளர்ச்சியில் சிறப்பாகப் பங்காற்றி பலரது பாராட்டைப் பெற்றுள்ளார். இக்கல்லூரி கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் சிறந்த பெறுபேறுகள் பெறுவதற்கு அயராது உழைத்தமை குறித்து வாழ்த்துகிறேன்.
சிறந்த பண்பும் பணிவும் மிக்க அதிபர் அவர்கள் ஓய்வுக்காலத்தை சமூகத்திற்கு பயன் தரும் வகையில் பணியாற்ற வேண்டி அவரது மணிவிழா சிறக்க துர்க்கை அம்பாளை பிரார்த்தித்து அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர்.கலாநிதி.ஆறு.திருமுருகன்,**
(தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.)
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.)
(இளைப்பாறியஅதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அறிவியலும் தொழிநுட்பமும் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் மாணவர் மனங்களை வடிகட்டி சீரிய பாதையில் செலுத்த வேண்டிய தலைமைப்பொறுப்பையேற்று இக்கல்லூரியில் நீங்கள் படைத்துவரும் வியத்தகு இணைப்பாடவிதான சாதனைகள் போற்றப்பட வேண்டியவையே.
அதிபர் திரு.மு.செல்வஸ்தான் அவர்களே! தங்களின் ஆளுமை முதிர்ச்சியும் ஆற்றலுள்ளவர்களை அடையாளம் காணும் மேதைமையும் தேவையறிந்து சேவை செய்யும் சீரிய குணமும் திட்டமிட்டு நகர்த்தி வெற்றிகளைப் பெருக்கும் செயல்வீரமும் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் மனவயலை உழுது விளைச்சலைப் பெருக்கும் வித்துவமும் கல்லூரியின் ஏற்றங்களுக்கெல்லாம் ஏணிப்படிகளாயின.

மணிவிழா மகிழ்வு கண்டு மனம் மகிழும் அதிபரே!
பவழ நூற்றாண்டும் உம் வாழ்வில் சித்திக்கட்டும்!

**அருட்பணி யோ.அ.ஜேசுதாஸ் அடிகள்**
பங்குத்தந்தை, புனித பற்றிமா மாதா ஆலயம், பண்டத்தரிப்பு



புகழ்பூத்த ஸ்கந்தவரோதய கல்லூரியின் அதிபர்கள் வரிசையில் 2015 முதல் ஒன்பது வருடங்கள் தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்கி ஓய்வு பெறுகின்ற கல்லூரி முதல்வர் திரு.மு.செல்வஸ்தான் அவர்களின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய ஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.
கல்லூரியின் பழைய மாணவர் என்ற வகையில் தனது சேவையை வழங்கி கல்லூரியின் கல்வித்துறை, விளையாட்டுத்துறையின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை வழங்கி ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ் பாதிப்படையாத வகையில் சேவையினை வழங்கிய அதிபர் அவர்களுக்கு கல்லூரி பழைய மாணவர் தாய்ச்சங்கத்தின் சார்பில் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**திரு.பா.சுதாகரன் செயலாளர்**
பழைய மாணவர் தாய்ச்சங்கம்

திரு.மு.செல்வஸ்தான் அவர்களின் அரச பணியானது தூரதரிசனத்தோடு கூடிய கல்விச் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை முன்னேற்றுவிப்பதற்கான வழிவகைகளை நடைமுறைப்படுத்தியதோடு நிற்காது அவர்கள் கலை, கலாச்சார செயற்திறன் மற்றும் விளையாட்டுப் பிரிவுகளுக்குள் இட்டுச் சென்று அவர்களின் விளையாட்டுத் திறன்களை கோட்டம், வலயம், மாகாண மட்டங்களில் வெற்றி பெறச் செய்தமை மட்டுமன்றி தேசிய மட்டத்திலான போட்டிகளிலும் வெற்றிவாகை சூடும்படி செய்தமையை அவர் பணியாற்றிய பாடசாலை மற்றும் கல்லூரிகளின் முன்னேற்ற அறிக்கைகளூடாகவும் அவர் பெற்ற சாதனை விருதுகளூடாகவும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கல்விப் பணியில் அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைகளுக்காக திர.செல்வஸ்தான் அவர்களை மனப்பூர்வமாக வாழ்த்துவதோடு இவரின் அரசசேவையின் பின்னரான ஓய்வுகால வாழ்க்கை மிகவும் ஆராக்கியமும் மகிழ்ச்சியும் நிறைந்து விளங்க அருளாசிகள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**திரு.இ.இளங்கோவன்**, பிரதம செயலாளர்

அகவை அறுபதைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு.மு.செல்வஸ்தான் அவர்களின் அரச சேவையைப் பாராட்டு வதுடன் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். திரு.மு.செல்வஸ்தான் அவர்கள் 1990 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை 34 ஆண்டுகள் அரச சேவையில் பணியாற்றியுள்ளார். ஆசிரியராக ஆரம்ப நியமனம் பெற்று 1996 ஆம் ஆண்டிலிருந்து நீண்ட காலம் அதிபராகப் பணியாற்றியுள்ளார். அரச சேவைக்கு மேலதிகமாக பல்வேறு சமூகப் பணி களிலும் இவர் தமது ஆளுமையை வெளிப்படுத்தி தேசத்தின் முன்னேற்றத்துக்கு அரும்பணியாற்றியுள்ளார்.இவரது ஓய்வு காலம் சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றேன்.

**க.ஜெ.பிரெட்லி**
மாகாணக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்



ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் பதவியினை அலங்கரித்த புகழ்பூத்த அதிபர்களில் மு.செல்வஸ்தான் அவர்களும் ஒருவராவர். ஒரு தசாப்தத்திற்கு அண்மித்த காலம்வரைகல்லூரியின் அனைத்து விதமான வெற்றிகளிலும் அதிபரின் பங்கு அளப்பெரியது. பல்துறை ஆளுமை மிக்க அதிபராக இருந்து கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முதன்மை பெற வழிகாட்டியவர் மட்டுமன்றி அவ் வெற்றிகளுக் கெல்லாம் ஊன்றுகோலாக அமைந்தவர். எமது கல்லூரியின் கல்விசார் கல்வி சாரா ஊழி யர் நலன் புரிக் கழகத்தின் சார்பில் மணிவிழாக் காண்கின்ற அதிபரும், அவரது அன்புக்குரிய குடும்பத்தாரும் சகல செல்வபோகமிக்க பெருவாழ்வை, நீடிய ஆயுளை, நல்லாரோக்கியத்தைப் பெற்று வாழ இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துக்கின்றேன்.

**திரு.தி.வேந்தகுமார் தலைவர்,**
கல்விசார், கல்விசாரா ஊழியர் நலன்புரிக்கழகம்



ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு.மு.செல்வஸ்தான் அவர்களின் சேவையினை கௌரவிக்கும் மணிவிழா வெகு சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள். அதிபர் அவர்களின் கல்விச்சேவை அளப்பரியது. அவர் 2024.11.07 அன்று ஓய்வு பெறுகிறார் என்ற செய்தி பெரிய மனஉறுத்தலை உருவாக்குகின்றது. என்றாலும் அவர் ஓய்வின் பின்னரும் தனது சேவையை தொடர்வார் என்ற நம்பிக்கையால் ஆறுதல் அடைகின்றேன்.
அவர் சுன்னாகத்தில் பிறந்து உயர்கல்வியை ஸ்கந்தவரோதயக் கல்லூரி கற்றவர் பின் அவரது பட்டப்படிப்புகள் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா H.N.D.A மற்றும் கல்விமாணி (B.ED) போன்ற பட்டங்களைக் கொண்ட கல்வித்தகைமையுடன் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். இறைவனுக்கு சமனான ஆசிரியப்பணியில் பல முன்னேற்றங்களைப் பெற்று அதிபர் தரம் ஒன்றிற்கு உயர்த்தப்பட்டார். பல சேவைகளை எமது ஊருக்கும் எமது கல்லூரிக்கும் ஆற்றி எல்லோரினதும் நன்மதிப்பையும் பெற்ற எமது அதிபர் அவர்களைக் கௌரவிப்பது எமக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

**யுடிற்றா சக்திகுமார்**
தலைவி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா

எமது வலயத்தில் உள்ள ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு.மு.செல்வஸ்தான் அவர்களின் சேவையை நயந்து வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். ஸ்கந்தவரோதயாவை மிளிரச் செய்ய இவரது தலைமைத்துவம் வழிவகுத்தது. சிறந்த ஆளிடைத்தொடர்பும், சமநிலை ஆளுமைப் பண்பும் கொண்ட திரு.மு.செல்வஸ்தான் அவர்களது சேவையினை நயந்து போற்றுவதுடன் அவருக்கு மணிவிழா வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஓய்வுக்காலம் சிறப்பானதாக அமைய இறையருள் துணை நிற்கட்டும்.

**திருமதி.லா.சுகந்தன்**
வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர்



திரு.மு.செல்வஸ்தான் அவர்கள். தனது ஆரம்பக் கல்வியை யா/சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயம், யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையிலும் உயர் கல்வியை யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் பயின்றார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டுடன் பாடசாலையில் சகலதுறைகளிலும் சிறந்து விளங்கினார். 2015ம் ஆண்டிலிருந்து தான் கல்வி பயின்ற கல்லூரி யின் அதிபராக சிம்மாசனத்தில் அமர்ந்தார். அவரின் வருகை ஸ்கந்தாவில் மீண்டும் ஒரு உன்னத பொற்காலம். இவர் கல்விப்பணியுடன் மட்டும் பயணிக்காது சிறுபராயம் முதல் சமய சமூக அறநெறி சார்ந்த அறப்பணிகளிலும் பயணித்தவர். தங்களை பாராட்டி வாழ்த்தி வணங்குவதில் சுன்னாகம் மக்கள் மன்றம் பிரான்ஸ் பெருமகிழ்வும் பெருநிறைவும் அடைகின்றோம்.

**த.தவபாஸ்கரன்**
தலைவர், சுன்னாகம் மக்கள் மன்றம்



அன்பும் பண்பும் மனிதநேயமும் கொண்ட மகத்தான மனிதராக உயர் திரு.மு.செல்வஸ்தான் அதிபர் அவர்களின் மணிவிழா குறித்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்விகற்று அதே கல்லூரியில் கடந்த ஒன்பது வருடங்களாக அதிபராக கடமையாற்றி தனது அறுபதாவது வயதில் மணிவிழா காண்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது அதிபர் அவர்களுக்கு ஓய்வுக்காலம் சிறந்து விளங்குவதற்கு தேகாரோக்கியத்துடன் கூடிய நீண்ட ஆயுளை இறைவன் வழங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல ஸ்கந்தப்பெருமானை பிரார்த்தித்து அதிபர் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த மணிவிழா வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றேன்.

**திரு.ச.சுதாகரன்**
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



கல்வி உலகு என்றும் நினைவில்க் கொள்ள வேண்டிய பெயர் வல்ல நல்மனிதன் மு.செல்வஸ்தான் என்பவராகும்.பல்லாண்டு காலம் கல்விப்புலத்தில்ப் பணியாற்றி இப்போது ஓய்வுபெறும் அவரின் பணி மகத்தானது என்றும் மறக்கவியலாதது.
அர்ப்பணிப்புச் சிந்தை கொண்டு அல்லும் பகலும் கல்லூரிக்காக உழைத்த அதிபர் திரு.மு.செல்வஸ்தான் அவர்களை இம் மணிவிழா நாளில் வாழ்த்துவதில் ஸ்கந்தவரோதயன் எனும் நிலையில் நின்று பெருநிறைவும் பேருவகையும் அடைகிறது மனது. அதிபரின் ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல அருளானந்தப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

**கிருஸ்ணர் பாலசுப்பிரமணியம்**
பழைய மாணவர் சங்கம் அமெரிக்கா

1982 ம் ஆண்டு ஜனவரி மாதம் காலியில் இருந்து இடமாற்றம் பெற்று யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராக கடமையேற்ற போது உயர்தர வர்த்தக பிரிவில் மாணவராகக் கல்வி கற்றுக்கொண்டிருந்தவர் திரு.மு.செல்வஸ்தான் அவர்கள். உயர்கல்வியை நிறைவு செய்து கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்று ஆசிரியர் சேவையில் இணைந்து பதில் அதிபராக, அதிபராக பல பாடசாலைகளில் தனது சேவையை வழங்கியவர். 2015 ஆண்டு எமது கல்லூரியில் அதிபராக கடமையேற்று முன்னைய அதிபர்களைப் போன்று கல்லூரியின் பாடவிதான செயற்பாடுகளிலும் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்பான சேவையை வழங்கியுள்ளார். அரச சேவையில் ஓய்வு என்பது தவிர்க்க முடியாதது. ஓய்வு காலத்தில் குடும்பத்தாருடன் மகிழ்ச்சியோடு வாழ வாழ்த்துகின்றேன்.

**R.ஜோர்ஜ்** (ஸ்கந்தவரோதயன்)
ஓய்வு நிலை பிரதி அதிபர்
போசகர் பழைய மாணவர் தாய்ச்சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.7

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்க சைவத் திருமுறை விழாவும், சைவ சமய செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய இரட்ணசபாபதி திருமண மண்டபத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது. (ரி)

## மக்கள் முன்னணியினரால் மாபெரும் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.7

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து நாளை மறுதினம் மாலை04.30 மணியளவில் பருத்தித்துறை கொட்டடிப் பிள்ளையார் கோயில் முன்பாக மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கொள்கை விளக்கப் பேருரை ஆற்றவுள்ளனர். (ச-66)


## பழைய மாணவர் சங்கம்
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### யாப்புச் சீர்திருத்தம்

31.03.2024 பொதுக்கூட்டத் தீர்மானத்திற்கு அமைய, எமது செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட யாப்பு சீர்திருத்தக் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. சங்க அங்கத்தவர்கள், யாப்பிற்கான திருத்த முன்மொழிவுகளை 22.11.2024ம் திகதி நண்பகல் 12மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "யாப்புச் சீர்திருத்தம்" எனக் குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி


## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

### அமரர் சண்முகம் இரகுநாதன்



அம்மன் வீதி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆச்சாரியார் அமரர் சண்முகம் இரகுநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (05.11.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்-இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை-துரையம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் புஸ்பராணி அவர்களின் அன்புக்கணவரும் மதிவதனி (லண்டன்), மயூரதி (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), விதுஷாந் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரன், அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மணிவண்ணன், சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அபிரா, கேசிகன், மாதவன், மாதுளன், நிஸ்விகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2024) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்பு:077 239 8419, 075 347 9314

(CS 129262) P-1

## சேவை நலன் பாராட்டு விழா

### செல்வி கனகசபாபதி அங்கயற்கண்ணி

SLTS - 1, BA, PGDE



**ஆசிரியர் சேவை விபரம்:**

- 1988.08.17 - 2010.02.16
  யா/ கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.
- 2010.02.16 - 2018.04.22
  யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
- 2018.04.23 - 2024.05.26
  யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.

அன்பின் ஆற்றலின் முழு உருவே
பெயருடன் இணைந்த அங்கயற்கண்ணியே
பல ஆளுமையின் சிற்பியே நவரச நாயகியே
சண்முகாவின் வளர்ச்சிக்காய்
அல்லும் பகலும் உழைத்தவரே
27.05.2024 இல் சேவை நிறைவுற்று
மணி விழாக் காணும்
உங்கள் பணி சண்முகாவின் வரலாற்றில்
பொன்னெழுத்துக்களில் இருக்கும் தங்களின் ஓய்வு
காலம் நலங்கள் நிறைந்ததாய் மிளிர
பெரு மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்
பாடசாலை நலன்புரி சங்கம்.

(CR/43608) J-1

## மரண அறிவித்தல்



### திருமதி தவகுலசிங்கம் செல்வக்கண்டு

அம்பன் குடத்தனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவகுலசிங்கம் செல்வக்கண்டு நேற்று முன்தினம் (05.11.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவகுலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம்-அன்னம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற நாகநாதன்-தங்கம்மா தம்பதிகளின் மருமகளும் மிகுந்தலாவின் (லண்டன்) அன்புத் தாயாரும் ரஜீபனின் (லண்டன்) மாமியாரும் அஸ்வந், அஹானா ஆகியோரின் பேர்த்தியும் அன்னம்மா ஆறுமுகம், இந்துமதி விஜயதாஸ் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (07.11.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது சகோதரியின் இல்லத்தில் (கிராம்புவில் மேற்கு கல்வயல் சாவகச்சேரி) நடைபெற்று தகனக்கிரிகைகளுக்காக பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கிராம்புவில் மேற்கு,
கல்வயல்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
076 645 1617

(CS 129269) P-1

## 12ம் ஆண்டு நினைவுநாள்



மண்ணில் : 19.01.1950 விண்ணில் : 07.11.2012

### அமரர் சவரிமுத்து தோமஸ்

**(தொழில்நுட்பவியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**Rtd. Technician, Royal Airforce of Oman)**

இளமை பருவத்தில் இனிமை தந்தீர்
துவண்ட பொழுதினில் துணையாய் இருந்தீர்
துன்பம் இல்லா இப்பொழுதில் ஏனோ
தூரதேசம் சென்றீர்
ஓடி ஓடி உழைத்த கால்கள்
ஓயாமல் உழைத்த கைகள்
ஓய்வெடுக்கச் சென்றதுவோ

சேமக்காலை வீதி,
நாவாந்துறை.

என்றும் உங்களை மறவா
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்து ஆட்சியமைப்பதற்கு பெரும்பான்மை கிடைக்கும்!



## ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

பொதுத்தேர்தலின் பின்னர் இணைந்து ஆட்சியமைப் பது தொடர்பில் தமிழரசுக் கட்சியுடன் நாம் எவ்வித பேச்சும் நடத்த வில்லை. தனித்து ஆட்சி அமைப்பதற் குரிய பெரும்பான்மைப் பலம் எமக்குக் கிடைக்கப்பெறும் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பின ரும், ஜே.வி.பி.யின் பொதுச்செயலாள ருமான ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, ஊடகவியலா ளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த்தே சியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) சஜித் பிரேமதாஸவுக்கே ஆதரவளித் தது. எமக்கு ஆதரவளிக்கவில்லை. இம்முறை அக்கட்சியினர் தேர்தலில் போட்டியிடு கின்றனர். தேர்தல் தொடர் பில் எம்மிடையே இணக்கப் பாடு எதுவும் இல்லை. அது சம்பந்தமாக பேச்சு நடத் தப்படவும் இல்லை. நாடாளுமன்றத் தேர்தலில் சாதாரண பெரும்பான்மை யைவிடவும் அதிகமான ஆசனங்கள் தேசியமக்கள்சக்திக்குகிடைக்கப்பெறும். எனவே, ஆட்சியமைப்பதற்குரிய உத வியை அவர் களிடம் (தமிழரசுக் கட்சி) கோருவதற்குரிய சாத்தியம் எழாது. எமக்கு நாடாளுமன்றத்தில் பெரும் பலம் தேவையில்லை, அரசாங்கத்தை பலமாக முன்னெடுப் பதற்குரிய பெரும் பான்மை பலம் இருந்தால் போதும் - என்றார். (எ-44)


வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான
கேள்வி கோரல் - 2025

1. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** : 2024.11.08- 2024.11.25 நண்பகல் 12.00 மணிவரை
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** : 2024.11.25 பி.ப 14.00 மணி வரை
**கேள்வி திறக்கும் திகதி** : 2024.11.25 பி.ப 14.30 மணி

2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 2,000.00 இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா 25,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக ரூபா 450,000/= ஐ செலுத்தி ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் **மூலப்பிரதி** என எழுதப்பட்டு **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இணைப்படிவம் கொண்ட தபாலுறையில் இணைப்பிரதி என எழுதப்பட்டு இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
8. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
9. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள் / கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
10. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக **வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பெறுகைக்குழுவால்** எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
11. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1. | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகம், புத்தூர் | 01 | 01 | 2025.01.01-2025.12.31 |
| 2. | உரும்பிராய் உப அலுவலகம் | 01 | - | 2025.01.01-2025.12.31 |
| 3. | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையம், நீர்வேலி | 01 | 01 | 2025.01.01-2025.12.31 |
| 4. | கோப்பாய் உப அலுவலகம் | 01 | - | 2025.01.01-2025.12.31 |
| 5. | அக்கரை கடற்கரை சுற்றுலா வளாகம் | 01 | 01 | 2025.01.01-2025.12.31 |
| 6. | அச்சுவேலி -கொல்களம், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 01 | 01 | 2025.01.01-2025.12.31 |
| | மொத்தம் | 06 | 04 | |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.**
**2024.11.06**
(எ.43617) (N-1)



# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 10 . 1949

இறப்பு 06 . 11 . 2024



## நாகமுத்து திருச்செல்வம்

மாறாம்புலம் அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து திருச்செல்வம் நேற்று (06.11.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - தங்கச்சியம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நாகமணி - செல்வநாச்சியார் தம்பதியரின் மருமகனும், சிவயோகமலர் (ரஞ்சினி) அவர்களின் பாசமிகு கணவரும், நிறோஜன் (சுவிஸ்), செந்தில்குமரன் (குமரன் - யாழ். பல்கலைக்கழகம் வெளிவாரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளை, மீனாட்சி மற்றும் கமலாவதி, அருட்செல்வம் ஆகியோரின் உடன் பிறந்த சகோதரரும், முருகானந்தனின் மைத்துனரும், மதுசனா (சுவிஸ்), அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.11.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**செந்தில்குமரன் (குமரன்) 077 432 3109**
**நிறோஜன் - 0041 7725 35341**

**"செல்வயோகம்"**
**மாறாம்புலம்,**
**அல்வாய் வடக்கு,**
**அல்வாய்.**
(28738) (N-1)



# மரண அறிவித்தல்

மலர்வு 13 . 04 . 1954

உதிர்வு 04 . 11 . 2024



## மகாதேவன் விமலாதேவி

கோண்டவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட மகாதேவன் விமலாதேவி கடந்த 04.11.2024 அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.11.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானவேல் வீதி,**
**கோண்டாவில்.**
(cs 56592) (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்காவின் பொற்காலம் மீண்டும் விரைவில் ஆரம்பம்

## ட்ரம்ப் வெற்றியுரை

வொஷிங்டன், நவ. 7
அமெரிக்க வரலாற்றில் ஆகச்சிறந்த மறுவருகையாக இந்தத் தேர்தல் முடிவுகள் இருக்கும் என்று அமெரிக்காவின் அடுத்த அதிபராகப் பொறுப்பேற்கவுள்ள ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து புளோரிடாவில் தனது ஆதரவாளர்களிடையே ட்ரம்ப் சுமார் 30க்கும் மேற்பட்ட நிமிடங்கள் உரையாற்றினார். தேர்தல் வெற்றியின் பின்னர் வேட்பாளர்கள் சம்பிரதாயபூர்வமான உரையை ஆற்றுவார்கள். அவ்வாறு ஆற்றப்பட்ட மிகநீண்ட உரைகளில் ஒன்றாக இந்த உரை அமைந்துள்ளது.

ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:
அமெரிக்கா பல்வேறு துறைகளிலும், பல்வேறு விதமாகவும் பின்னடைவைச் சந்தித்திருந்தது. அனைத்துத் துறைகளிலும் நாம் மீண்டெழ வேண்டும். அமெரிக்காவைப் பலப்படுத்த வேண்டும் என்ற முடிவைத்தான் வேட்பாளர்கள் தமது வாக்குகள் மூலம் சொல்லியிருக்கின்றனர். எனவே, அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதியை நான் வழங்குகின்றேன். அமெரிக்கா அமெரிக்கர்களுக்கே. எமது பணம், எமது செல்வம் தேவையற்ற விதத்தில் செலவிடப்படக்கூடாது என்பதில் நான் உறுதியாக உள்ளேன். எங்களின் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வேண்டும். எங்களின் தொழில் துறைகள் மேம்படுத்தப்பட வேண்டும். நாம் எமது நாட்டைப் பலப்படுத்தவும் கட்டியெழுப்பவும் வேண்டும். அசைக்க முடியாத பொருளாதார சக்தியாக நாம் மாறவேண்டும்.

இந்த வெற்றி அற்புதமானது. எனக்குக் கிடைத்த அணி தனிச் சிறப்பானது. என் வெற்றிக்காக உழைத்தவர்கள், எனக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்கள் அனைவருக்கும் நன்றிகள். கடவுள் உங்களை ஆசீர்வதிக்கட்டும். கடவுள் அமெரிக்காவை ஆசிர்வதிக்கட்டும், கடவுள் எங்களை ஆசிர்வதிக்கட்டும் - என்றார். (அ-ம)

---

### நாணய...

இது தொடர்பில் கொழும்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
அரசாங்கம் மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியே அதிகாரத்துக்கு வந்தது. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் யோசனைகளை வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாகவே முன்வைக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தை இந்த வருடம் சமர்ப்பிப்பதில்லை எனத் தெரிவித்திருக்கிறது. அதற்கு பதிலாக இடைக்கால கணக்கறிக்கையொன்று நிறைவேற்றப்படவுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்திலேயே, அரச வருமானத்தின் விவரங்கள் குறிப்பிடப்படும். அதன் அடிப்படையிலேயே நாணய நிதியத்தின் கடன் வழங்கல் தீர்மானிக்கப்படும். எனவே, வரவு - செலவுத் திட்டம் பிற்போடப்பட்டால், அதன்மூலம் நாணய நிதியத்தின் கடன் பெறுகையும் பிற்போகும். மேலும் அரசாங்கத்துக்கு உலக வங்கி 200 டொலர் மில்லியன் வழங்கி இருப்பதாக அரசாங்கம் பெருமையாக தெரிவித்து வருகிறது. ஆனால் அது நன்கொடையாக வழங்கப்படவில்லை. கடனாகவே வழங்கப்பட்டிருக்கிறது. அதுவும் எமது அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையின் விளைவாகவே இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தை...

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கம், அந்தச் சட்டத்தை நீக்காமல் இரட்டை வேடம் போடுவதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றதே? என்று ஊடகவியலாளர்கள் நேற்று வினவியதற்குப் பதில் தெரிவிக்கையிலேயே, 'பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும். அது அரசாங்கத்தின் நிலைப்பாடு' என்று விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் கடந்த முறையும் கேள்வி எழுப்பட்டது. தற்போது நாடாளுமன்றம் செயற்படவில்லை. எனவே, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது, மறுசீரமைப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தின் ஊடாகவே நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். அதனால்தான் தற்போதைய சூழ்நிலையில் நீக்கப்படாது என கூறி இருந்தேன்.

பயங்கரவாத தடைச்சட்டம் மறுசீரமைக்கப்பட வேண்டும், நீக்கப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. நாடாளுமன்றம் கூடிய பின்னரே அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும். எனவே, இது தொடர்பில் தவறான கோணத்தில் கருத்துகளைப் பரப்ப வேண்டாம். இது விடயத்தில் நாம் இரட்டை நிலைப்பாட்டை கடைப்பிடிக்கவில்லை. அன்று இருந்த நிலைப்பாட்டிலேயே இன்றும் உள்ளோம். புதிய நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் முடிவெடுக்கப்படும்' - என்றார். (அ-ம-44)

### பயங்கரவாதத்...

பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் 'பி' அறிக்கை தயார் செய்து வவுனியா நீதிவான் நீதிமன்றில் அவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நடைபெற்றுவந்த நிலையில், அவர்கள் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காகத் தவணையிடப்பட்டிருந்தது. இதன்போதே, அவர்கள் மூவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். குறித்த வழக்கில் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை தவிர்ந்து வேறு எவ்விதமான விடயங்களிலும், சந்தேகநபர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்பட வில்லை என்று தெரிவித்தே அவர்கள் மூவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-ம-110)

### தேர்தல்...

அல்லது ஸ்டிக்கர் பொறித்த வாகனங்கள் பயணிப்பதற்கு தேர்தல் திணைக்களம் தடை விதித்துள்ளது.

குறித்த விதிமுறையை மீறி, வவுனியாவில் வேட்பாளரின்றி வேட்பாளரின் ஸ்டிக்கர்களுடன் நடமாடிய மூன்று வாகனங்களே வவுனியாப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ம-110)

### பதில்...

பனைகளைத் தறிப்பதற்காக அறவிடப்படும் தண்டப் பணத்தில்தான் ஊழியர்களின் ஊதியம் வழங்கப்படுகின்றது என்று பனை அபிவிருத்திச் சபையின் பதில் தலைவர் தெரிவித்த கருத்துக்கு எதிராகவும், அவர் ஊழியர்களுடன் நடந்துகொள்ளும் முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இவ்வாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற பின்னர் பனை அபிவிருத்தி சபையின் தலைவராக செல்வின் நியமிக்கப்பட்டார். அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்று சில தினங்களிலேயே, அவர் மாற்றப்பட்டு புதிய தலைவராக வி.சகாதேவன் நியமிக்கப்பட்டார். எனவே, செல்வின் எதற்காக மாற்றப்பட்டார்? என்பதற்கு முறையான விளக்கம் தமக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-ம-20-60)

### குளவிக்...

நேற்றுமுன்தினம் இரவு தனது வாகனத்தில் நித்திரையிலிருந்த போது அவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார். இதையடுத்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளைஞர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். சடலம் உடல்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-66)

### டொனால்ட்...

விக்கப்பட்டன. ஆரம்பம் முதல் இறுதி வரை ட்ரம்புக்கும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான கமலா ஹரிஸுக்கும் இடையே 30க்கும் மேற்பட்ட இடைவெளி இருந்து வந்த நிலையில், கணிசமான முன்னிலையில் எந்தப் பதற்றமும் இல்லாமல் ட்ரம்ப் வெற்றிபெற்றார். (அ-ம)

### வவுனியாவில்...

தலவாக்கலை பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-110)

### தூதரக...

அரசியல் ரீதியாக நியமனங்கள் வழங்கப்பட்ட 15 தூதரக அதிகாரிகளின் நியமனங்களே ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் டிசெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் நாடு திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் வெளிவிவகார அமைச்சரும், அமைச்சரவையின் பேச்சாளருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

திரும்ப அழைக்கப்பட்டுள்ள 15 தூதரக அதிகாரிகளில், முன்னாள் அரசியல்வாதிகளின் உறவினர்களும் அடங்குகின்றனர் என்றும் அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளின் நியமனங்களை அரசாங்கம் அண்மைக்காலமாக மறுசீரமைப்புச் செய்து வந்தது. சர்வதேச மாநாடுகள் காரணமாக சில முடிவுகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, பிரிக்ஸ் போன்ற மாநாடுகள் முடிவடைந்துள்ள நிலையிலேயே, அரசியல் நியமனம் வழங்கப்பட்ட தூதரக அதிகாரிகள் அநுர அரசாங்கத்தால் திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### சந்திரிகாவின்...

விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்குரிய பாதுகாப்பு நீக்கப்படவில்லை. அவரின் பாதுகாப்புக்கு 57 பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கப்பட்டுள்ளனர். எனவே, அது 30ஆக குறைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுவது பொய். பாதுகாப்பு எண்ணிக்கையை நாம் வெளியிடத் திட்டமிடவில்லை. ஆனால், தன் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் கடிதம் எழுதியுள்ளார். ஆதலால்தான் நாங்கள் இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டி வந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு எனும்போது, வெறுமனே பாதுகாப்பு அதிகாரிகள் மட்டும் வழங்கப்படுவதில்லை. பாதுகாப்பு வாகனங்கள், அம்புலன்ஸ் உட்பட பல விடயங்கள் வழங்கப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களுக்காக மட்டும் 120 மில்லியன் ரூபா வரை செலவாகின்றது. இது வீண் செலவு. இதனை கட்டுப்படுத்த வேண்டும். இதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-44)

### முறைப்பாடு...

முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமஷ்டிக் கட்டமைப்பை ஏற்படுத்த விடோம்!

சரத்வீரசேகர அழுங்குப்பிடி

**கொழும்பு, நவ.7**

**ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்கு 29 ஆயிரம் படையினர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். எனவே, இந்த நாட்டில் சமஷ்டிக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த உறுப்பினரான சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில்,

2015 நல்லாட்சிக் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு பணி இறுதிப்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியுள்ளார். இலங்கை மதச்சார்பற்ற நாடாக இருக்கவேண்டும் எனவும், மாகாணசபைகளுக்குரிய அதிகாரம் பலப்படுத்தப்படவேண்டும் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மாகாண சபையில் நிறைவேற்றப்படும் சட்டங்களை மத்திய அரசாங்கம் இரத்துச் செய்ய முடியாது.

மாகாண இணைப்புக்குரிய அதிகாரமும் மாகாணசபைக்குச் செல்லும். எல்லை நிர்ணயம்கூட மாகாணசபை வசம் செல்லும் வகையில் ஏற்பாடுகள் உள்ளன.

எனவே, 2015 அரசமைப்பு அமுலுக்கு வந்தால் இலங்கை சமஷ்டி நாடாக மாறும். நாடாளுமன்ற அதிகாரம் குறையும். எனவே, இதற்கு இடமளிக்கக்கூடாது. ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்கு படையினர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். எனவே, சமஷ்டி முறைமைக்கு இடமளிக்கமாட்டோம்.

ஆட்சியாளர்கள் கள்வர்கள் எனக் கூறியே அநுர தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்னும் கள்வர்கள் பிடிபடவில்லை. இதன்மூலம் அவர் கள்கூறியது பொய்கள் என்பது உண்மையாகியுள்ளது - என்றார். (ச-44)

## அநுரவின் மாற்றம் மக்களுக்கு ஏமாற்றமே

ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

பணம்அச்சிடப்படுவதால் மீண்டும் பண வீக்கம் அதிகரித்து பொருள்களின் விலைகளும் அதிகரிக்கவுள்ளன. வரிசை யுகம் உருவாகும். மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாடு மீண்டும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வங்குரோத்தடைந்த நாடொன்று மிகக் குறுகிய காலத்தில் அந்த நிலைமையிலிருந்து மீண்டிருக்கின்றது என்றால் அது இலங்கை மாத்திரமே.

அதற்குரிய பெருமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது அரசாங்கத்தையே சேரும். எவ்வாறிருப்பினும் அதனை மக்கள் மறந்து விட்டனர்.

தற்போது யார் வேண்டுமானாலும் நாட்டை நிர்வகித்துச் செல்லலாம் என்று மக்கள் எண்ணுகின்றனர். ஆனால் அது தவறாகும். தற்போது நாடு பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நாணயநிதியம் குறிப்பிட்டுள்ள இலக்கை நோக்கிச் செல்லவேண்டும். ஆனால் அந்த இலக்கை எவ்வாறு அடைவது என்பது குறித்த அறிவு இந்த அரசாங்கத்துக்கு இல்லை. தற்போது கிடைத்துள்ள அனைத்தையும் இழக்கும் போது தான் மக்களுக்கு எமது ஆட்சியில் கிடைத்தவற்றின் பெறுமதி புரியும் -என்றார். (ச-இ)



## கலாசார மத்திய நிலையத்தைப் பாதுகாப்பது பற்றி ஆராய்வு

இந்திய அரசின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட யாழ். கலாசார மத்திய நிலையத்தினைப் பராமரித்தல் மற்றும் கலாசார நிகழ்வுகளை முன்னெடுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். சுண்டுக்குழியில் வடக்கு ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது யாழ். கலாசார மத்திய நிலையத்தில் கலை, கலாசார நிகழ்வுகளை நடத்துதல் தொடர்பிலும், தொடர்ந்தும் இயங்குநிலையில் வைத்திருத்தல் தொடர்பிலும், சமூகத்தின் பாவனைக்கு விடுதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், கலாசார மத்திய நிலையத்தினை உரிய திணைக்களங்களிடம் ஒப்படைத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். இந்திய துணைத்தூதுவர் சாய்முரளி, வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ரி-66)

## நுண்ணறிவுப் பரீட்சை

சைவபரிபாலனசபையால் இலங்கை சைவநெறியும், தமிழ்மொழியும் நுண்ணறிவுப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறும். பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அதற்கான விண் ணப்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னராக எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைகளும் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் அலுவலகத்துடன் 021 222 7678 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-25)



## தெளிவான தெரிவுகள் மக்களிடம் வேண்டும்!

டக்ளஸ் தெரிவிப்பு

கடந்த காலத் தவறுகளிலிருந்து மீண்டெழுந்து நடைமுறைச் சாத்தியத்தை உணர்ந்து மக்கள் சரியான திசைவழி நோக்கிப் பயணிப்பதன் ஊடாகவே எதிர்பார்ப்புகளை வெற்றிகொள்ளமுடியும். சிறந்த நிகழ்காலத்தை உருவாக்கிக் கொள்ள தமிழ் மக்கள் தெளிவாக முடிவெடுக்க வேண்டும். -இவ்வாறு முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதர தமிழர் அரசியல் தரப்பினர் எவருமே இதுவரை செய்திராத அபிவிருத்திகளையும் மக்களின் நலன் சார் திட்டங்களையும் இணக்க அரசியல் வழிமுறையின் ஊடாக கடந்த காலத்தில் நாம் சாதித்துக் காட்டியுள்ளோம். உங்கள் அரசியல் தெரிவுகள் தெளிவானதாகவும் மக்கள் நலன் சார்ந்து மக்களுடன் வாழும் தரப்பினராகவும் இருப்பது அவசியமானது. அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தருணம் ஒன்று மக்களாகிய உங்கள் கரங்களுக்கு மீண்டும் வந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை சரியானவர்களை நோக்கி நீங்கள் வழங்குவது அவசியமாகும் - என்றார். (ச)

**சமையலாள் தேவை**
யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
077 717 2217
(CR43592) J-1

**A/L வரலாறு**
மாபெரும் கருத்தரங்கு
வடக்கின் முதல் நிலை வரலாறு பாட ஆசிரியர்
M.பத்மன் B.A(Hons) History, P.G.D.E, Dip. in Psy, M.A (Hons) History
Master of Education (M.E.D)
க.பொ.த உயர்தர வரலாறு பாட வளவாளரின் வழிகாட்டலை பெற்று உயர் பெறுபேறுகளைப் பெற்றிட வாரீர்.
இடம்: D.M.I ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
காலம்: 09.11.2024 சனிக்கிழமை
10.11.2024 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.00 மணி
தொடர்புகளுக்கு: 077 482 5587
(CS/56619) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.